
T
T03783
R001I05

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி: 36

# ஸ்ரீ சங்கர விஜயம்

(19 கலர் படங்களுடன் கூடியது)




ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
சென்னை

3783



ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்




ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவில், காஞ்சீபுரம்

காமகோடி க்ரந்தாவளி : 36

# ஸ்ரீ சங்கர விஜயம்

(19 படங்களுடன் கூடியது)



**ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்**
பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

பதிப்புரிமை]

[விலை அணா 12



SRI ADI SANKARACHARYA
(ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீபகவத்பாதர்)

ஸ்ரீ:

# ஸ்ரீ சங்கர விஜயம்

ஆதி சங்கரர் சிவமதம் விஷ்ணுமதம் முதலிய ஆறு மதங்களையும், அத்வைததத்வ உண்மையையும் நிலே நாட்டியருளிய ஆதி குருநாதர்.

அவர் அவதரித்த இடம் எங்கே ?

நம் பரதகண்டத்தின் தென் கோடியிலுள்ள கேரள ராஜ்யத்தில் ஓடும் ஆல்வாய் என்னும் நதிக்கரையிலுள்ள காலடி என்னும் கிராமம்.

குருநாதர் மக்கட்குச் செய்த உபகாரம் என்ன ?

சாச்வதமான் சுதந்திரம் என்னும் சுயராஜ்யத்திற்கு வழி காட்டியதே அவர் செய்த பேருபகாரம். அரசியல் வாதிகளில் பெரியோராயிருப்பவர் பிற நாட்டவருடைய இன்னல்களிலிருந்து நாம் சுதந்திரம் அடைய வழி செய்திருக்கிறார்கள். நமது குருநாதரோ அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே பாவம், பிறவி முதலிய உள்ளத்தின் கண்ணுள்ள இன்னல்களிலிருந்து நாம் சாச்வதமான விடுதலையை அடைய தெளிவாயும், நிச்சயமாயுமுள்ள பெருவழிகளை வகுத்திருக்கிறார். மக்களின் எல்லாத் துயரமும் நீங்க இவ்வழிகளின் முடிவே உண்மையான விடுதலை.

**இவைகளுக்கெல்லாம் மூலம் என்ன ?**

உபநிஷத்துள்ளிட்ட அனாதி வேதமும் அதை அனுசரித்த மஹரிஷிகளின் சுவானுபவத்தைத்தெரிவிக்கும் ஆகம புராணாதிகளும் சாஸ்திரங்களுமே.

**அவ்வழிகளின் விவரமும் நோக்கமும் என்ன ?**

எல்லா உலகங்களுக்கும் ஆதாரமாயுள்ள பரமாத்மா எனப்படும் பரம்பொருள் மக்களிடம் கருணையினால் அநேக உருவங்களை எடுத்துக்கொண்டு, அவ்வுருவங்களில் ஏதாவதொன்றை மனதில் தியானம் செய்து வழிபடும் மக்களுடைய பாவங்களைப் போக்கி அவர்கள் உண்மையான பேரானந்தத்தை அடையும்படிச் செய்கிறார். அவ்விதமான அநேக உருவங்களில் கணபதி, முருகன், (பைரவன் என்பர் சிலர்) சூரியன், விஷ்ணு, சிவபெருமான், பராசக்தியாம் அம்பிகை என்னும் இந்த ஆறு மூர்த்திகளில் மானிடர் ஒவ்வொருவரும் ஏதாவதொரு மூர்த்தியினிடம் அன்பு செலுத்தி தம் வாழ் நாளின் முடிவிற்குள் அவ்வன்பின் மூலமாக பரம் பொருளாம் பரமாத்மாவினோடு ஒன்றாகும் உண்மையை அணுகச் செய்வதே வழிகளாகும்.

மலையினின்று அலறிக்கதறி வரும் நதிகள் ஸமுத்திரத்தில் ஒன்றாகக் கலந்தபோது எவ்விதம் நிறைந்த சாந்தத்தை அடைகின்றனவோ அவ்விதமே நாம் பரமாத்மாவிடம் ஒன்றாகும் நிறைந்த சாந்த நிலையே அத்வைதம். இந்நிலையை மக்கள் அடையும்படிச் செய்விப்பதைவிட மக்கட்கு ஒருவர் செய்யும் உபகாரம் வேறில்லை. மற்ற உபகாரங்கள் தாற்காலிகமானவை. சாச்வதமான பேருப

காரத்தைச் செய்து வைத்திருப்பவர் நமது குரு நாதரே.

**ஷண் மதங்களை ஸ்திரப்படுத்தியதின் நோக்கம்:—**

மக்கள் அவரவர் ப்ரீதியை ஒட்டிய ஷண் மதங்களுள் ஒன்றில் அந்தந்த மூர்த்தியை வழிபட்டு உய்தல். அவ்வாறு (அந்த ஆறு) மூர்த்திகளைப்பற்றியும் ஸ்ரீ ஆதிசங்கரர் தனித்தனியான ஸ்தோத்திரங்களை அருளியிருக்கிறார். அவைகளில் ஒவ்வொரு ச்லோகம் இந்த நூலின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**நமது ஆதிகுருநாதர் இவ்வுலகில் எத்தனை காலம் மானிட சரீரத்துடன் வசித்திருந்தார்?**

32 வருஷங்கள் என பெரியோர்கள் கூறுகிறார்கள். இவ்விஷயத்தில் இன்னும் சில விசேஷங்களையும் கூறுகிறார்கள்.

**ஆதி சங்கரர் ஜனனம்**


கொச்சின் ராஜ்யத்தில் காலடிக்கருகில் திருசிவபேரூர் அல்லது திரிசூர் என்று சொல்லப்படும் பெரிய சிவ க்ஷேத்ரம் இருக்கிறது. நமது குருநாதரின் மாதா பிதாக்களான ஆர்யாம்பிகை, சிவகுரு என்னும் தம்பதிகள் வ்ருஷாசலம் என்ற பெயரையும் உடைய அந்த சிவக்ஷேத்ரத்தில் புத்திரார்த்தமாகத் தவம் செய்தார்கள். பரமசிவன் அவர்கள் ஸ்வப்பனத்தில் தோன்றி 'நானே உங்களுக்குப் புத்திரனைகப் பிறக்கிறேன். ஆனல் எட்டு வயதுதான் எனது ஆயுள் காலம்' என்று சொல்லி மறைந்தார். சில காலத்திற்கெல்லாம் ஆர்யாம்பாள் கர்ப்பந்தரித்து ஒரு ஆண் மகனைப் பெற்றாள்.

**குருநாதரின் கல்விப் பருவம்**


ஸ்ரீகுருநாதர் அவதாரம் செய்த பின் ஒரு மனிதன் நூறுவயது ஜீவித்திருந்து அவ்வாயுள் முழுவதும் சாஸ்திராப்யாஸங்களையும் உலக அனுபவங்களையும் ஸம்பாதித்திருந்தால் அவனுக்கு எவ்வித பூர்ண பக்குவநிலை ஏற்படுமோ அவ்வித பக்குவநிலை நமது குருநாதருக்கு எட்டு வயதிற்குள்ளாகவே ஏற்பட்டுவிட்டது. ஐந்தாவது வயதிற்குள்ளாகவே வேதத்தைத்தவிர இதர கலைகளெல்லாம் நமது குருநாதரை அடைந்துவிட்டன. 5-வது வயதிலேயே உபநயனத்திற்குப் பக்குவமான நிலை ஏற்பட்டு விட்டதனால் அவ்வயதிலேயே உபநயனம் நடந்தது. பாக்கியுள்ள மூன்று வருஷங்களில் வித்தையும், ஞானமும், தயையும், தேஜஸூம் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தன. நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும், நான்கு உபவேதங்களும், நான்கு உபாங்கங்களும், ஆகவே உலகிலுள்ள ஸகல வித்தைகளும் ஸ்ரீகுருநாதரை வந்தடைந்தன. தயை என்னும் கருணை நிறைந்து ததும்பியோடியதற்கு உதாரணமாக அந்தக் காலத்தில் ஒரு சம்பவம் நடந்தது.

**ஒரு ஏழையிடம் கருணை**


நமது குருநாதர் ஏழாவது வயதில் ஒரு துவாதசி தினத்தன்று காலடிக்குப் பக்கத்துக் கிராமமொன்றில் உள்ள ஒரு ஏழை வீட்டிற்கு ப்ரும்மசரிய விதிப்படி 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று சொல்லிக் கொண்டு பிக்ஷை கேட்கப்போனார். (சாஸ்திர முறைப்படி ஏழையானாலும் பணக்காரனானாலும்




ஸ்ரீ சங்கரபகவத் பாதாள் ஆலயமும்
அவர்கள் தாயார் சமாதியும், காலடி



ஸ்ரீ ஆதி சங்கரர் சந்நிதி, காலடி



துங்கபத்ரா நதியும் ஸ்ரீ சாரதாம்பிகை கோயிலும், சிருங்கேரி



ஸ்ரீ கோவர்த்தன பீடம், பூரி

எல்லா ப்ரும்மசாரிகளும் பிக்ஷை வாங்கித்தான் சாப்பிடவேண்டு மல்லவா) அவ்வீட்டின் புருஷன் உஞ்சவிருத்தி வாங்க வெளியில் போயிருந்தான். உஞ்சவிருத்தி அரிசி வந்த பிறகே சமையல் செய்ய வேண்டிய நிலையில் இருந்த அவ்வீட்டு அம்மையோ நமது குருநாதருக்கு ஏதாவது பிக்ஷை இடவேண்டு மென்று தேடித் தேடிப்பார்த்தாள். குருநாத ருடைய தேஜஸைப் பார்த்து வீட்டில் ஒன்றுமில்லை என்று எப்படிச் சொல்வது என்று கலங்கினாள். அன்று துவாதசிப் பாரணைக்காகத் தனது கண வன் முதல்நாள் கொண்டுவந்து வைத்திருந்த ஒரு பக்கம் அழுகிய ஓர் நெல்லிக் கனியைக் கண்டாள். வெகு துக்கத்துடன் அக்கனியை நமது குருநாதர் கையில் பிக்ஷையாக அர்ப்பணம் செய்தாள். அவ ளுடைய கண்களில் தாரை தாரையாக நீர் சொரிந் தது. அதைவிட நமது குருநாதருடைய கண்களில் கண்ணீர் ப்ரவஹித்தது. தமது அருந்தவ சக்தியி னால் மஹாலக்ஷ்மியைத் தியானம் செய்தார். "இந்த க்ஷணமே இவ்வீட்டினருடைய வறுமையைப் போக் கியாகவேண்டு"மென மன்றாடினார். 'இத்தம்பதி கள் வறுமையை அனுபவிக்க வேண்டிய கர்மம் வெகுவாய் பாக்கி இருக்கிறதே' என்று மஹாலக்ஷ்மி சொல்லியும் 'அக்கர்மத்திற்குப் பதிலாக யான் இது காறும் செய்திருக்கும் தவத்தை அர்ப்பணம் செய் கிறேன்' என்று சொல்லி மஹாலக்ஷ்மி ப்ரஸன்ன மாகும்படிச் செய்து அவ்வீட்டினர் வறுமை நீங்கி அவ்விடத்தில் ஸர்வைச்வர்யமும் பொழியும்படி அரு ளினார். அத்தருணத்தில் மஹாலக்ஷ்மியைக் குறித்து செய்த ஸ்தோத்திரமே கனகதாராஸ்தவம்

என்று இன்றும் வழங்கிவருகிறது. இன்றும் பலர் தம் வறுமை நீங்க அந்த ஸ்தோத்திரத்தில் ஒரு ச்லோகத்தையாவது பாராயணம் செய்து மஹா லக்ஷ்மியைப் பிரார்த்திக்கிறார்கள். அந்த கனக தாரா ஸ்தோத்திரத்தில் இது முக்கியமான ச்லோகம்:—

கனகதாரா ஸ்தோத்திரம்

दद्याद्दयानुपवनः द्रविणाम्बुधाराम्
अस्मिन्नकिञ्चनविहङ्गशिशौ विषण्णे ।
दुष्कर्मघर्ममपनीय चिराय दूरात्
नारायणप्रणयिनीनयनाम्बुवाहः ॥

தத்யாத் தயானுபவன: த்ரவிணாம்புதாராம்
அஸ்மின் அகிஞ்சன விஹங்கசிசௌ விஷண்ணே |
துஷ்கர்ம கர்மமபனீய சிராய தூராத்
நாராயணப்ரணயினீநயனாம்புவாஹ: ||

நமது குருநாதரின் கருணையைக் காட்டும் இச் சம்பவம் நடந்த பின்னர் அவருடைய ஆயுள் பூர்த்தியாகும் எட்டாவது வயதின் முடிவில் மற்றொரு ஸம்பவம் நடந்தது. ஒரு நாள் காலை ஆல்வாயில் ஸ்நானத்திற்கு இறங்கினார். ஒரு முதலை காலைப் பற்றிக்கொண்டது. அசக்தமான தாயார் கரையில் நின்று கதறினள். குருநாதர் தாயாரைப் பார்த்து 'அம்மையே! நான் ஸன்யாஸம் செய்து கொள்கிறேன். நான் மரித்தால் உனக்கு புத்ரன் கையால்

முதலை காலைப் பிடித்தது

கிருத்தியம் கிடைக்காதே என்ற குறை வேண்டாம். நான் உண்மையான முறையில் ஸன்யாஸம் கொண்டால் உன் ஜன்மமும் கடைத்தேறி

**ஆச்ரமமும் வயது இரட்டித்ததும்**

விடும் என்று சாஸ்திரம் கூறுகிறது. மேலும் ஸன்யாஸம் செய்து கொண்டால் ஒருக்கால் நான் பிழைத்தாலும் பிழைக்கலாம். ஏனெனில் ஸன்யாஸம் கொள்வது மறுஜன்ம மெடுத்ததற்குச் சமானம் என்று சில பெரியோர்கள் கூறுகிறார்கள். அதன்படி இஜ்ஜன்மத்திற்கு ஏற்பட்ட எட்டு வயது மறுஜன்மமாம் ஸன்யாஸத்தில் மற்றொரு எட்டு வயதாக வளரலாம். நீ துக்கிக்கவேண்டாம்' எனச் சொல்லி அம்மையின் முன்னிலையில் ஸன்யாஸாச்ரமம் கொண்டார். துர்வாஸ முனிவரின் சாபத்தினால் ஒரு கந்தர்வன் இம்முதலை ஜன்மத்தை எடுத்து இக்காலடியில் ஸ்ரீ சங்கரரது காலடியைத் தொட்டதின் பயனாக நற்கதி அடைந்தான். குருநாதர் பாதத்தைத் தொட்டுவிட்டு விட்டுவிட்டான்.

**ஸன்யாஸாச்ரமம்**

குழந்தை பிழைத்ததும் தாயார் குதூகலத்துடன் வீட்டிற்குக் குழந்தையை அழைக்க, குருநாதர் 'இனி எனக்கு உலகத்தில் எல்லா வீடுகளிலுமுள்ள பெண்டிரெல்லாம் தாய்மார்கள். எல்லோருக்கும் நான் குழந்தை. எல்லோருக்கும் என்னால் இயன்ற ஆத்மப்பணியை நான் செய்ய வேண்டும். இவ்வாச்ரம தர்மத்தின்படி நான் ஒரு வீட்டிற்கு மாத்திரம் குழந்தையாய் இருக்கக் கூடாது.' என்று சொல்லிக்கொண்டு விதிப்படி காஷாய தண்ட

கமண்டல உபதேச சின்னங்களை குரு முகமாக அடைய குருவைத் தேடி ஸஞ்சாரமாகப் புறப்பட்டார். அப்பொழுது தாய்வெகுவாய்ப் பதைப்பதைக் கண்டு "உனது அந்தியகாலம் வரும்பொழுது என்னை ஸ்மரித்துக்கொள்; நான் எங்கிருந்தாலும் அதை ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டு 'குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளிவைத்தல்' என்னும் முறைப்படி நான் வந்து என் கடமையைத் தீர்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு வடக்கு நோக்கிப் புறப்பட்டு நர்மதா தீரத்தை அடைந்து கோவிந்த பகவத்பாதர் என்ற குருவிடம் ஆச்ரம சின்னங்களையும், உபதேசங்களையும் பெற்றுக் கொண்டார்.

**கோவிந்த பகவத் பாதகுருவை அடைதல்**

கோவிந்தபகவத்பாதர் பதரிகாச்ரமத்திலிருந்து தமது குருவான கௌடபாதருடைய உத்தரவின் படி நமது குருநாதருக்கு உபதேசம் செய்வதற்காகவே நர்மதா தீரத்தில் காத்துக்கொண்டிருந்தார். கோவிந்த பகவத்பாதர் சங்கராவதார மூர்த்திக்கு உபதேசம் செய்யும் படியான ஒரு பெருந் தொண்டில் தம் குருநாதர் ஆணைப்படி ஈடுபட்டோமே என்று ஒருபுறம் ஸந்தோஷித்தாலும், லோகத்திற்கே குருவாகப் போகும் சங்கரமூர்த்தியின் பாதத்தில் வீழ்ந்து கடைத்தேற உலகமே காத்திருக்கும் பொழுது, நாம் மாத்திரம் குரு என்ற முறையினால் சங்கர மூர்த்தியின் பாதங்களில் வீழ்ந்து தொழும் பாக்ய மற்றுப்போய்விட்டோமே என்று துக்கித்

தார். ஸ்ரீகோவிந்த பகவத்பாதர் ஸ்ரீ சங்கராவதார மூர்த்தியான நமது குருநாதரை காசிக்குப் போகும் படிக் கட்டளையிட்டார். வேதங்களின் சிகரமாகிய உபநிஷத்துக்களுக்கும், க்ருஷ்ண பகவான் அர்ஜு னனுக்கு உபதேசம் செய்த பகவத்கீதைக்கும், இவைகளின் ஸாரமாய் வ்யாஸ மஹரிஷி இயற்றிய ப்ரும்ம ஸூத்திரத்திற்கும் உண்மையான பொருள் துலங்குமாறு நீ காசியில் போய் இருந்து கொண்டு அவைகளுக்குப் பாஷ்யம் செய்வாயாக என்று கட் டளை இட்டார். [காசி க்ஷேத்ரம் 56 தேசத்து பண் டிதர்களும் வசிக்குமிடம். காசி க்ஷேத்ரத்தில் ஒரு நூல் ப்ரசித்தி அடைந்தால் பாரதவருஷம் முழுவ தும் அந்நூல் ஸ்திரப்பட்டுவிட்டது என்ற நிலை அன் றும் இன்றும் காசிக்கு உள்ளது].

நமது குருநாதர் காசிக்குச் சென்றார். கங்கை யைத் துதித்தார். பரமானந்தத்துடன் நீராடினார். கேதாரம் முதல் இராமேச்வரம் வரை காசியாத்திரை யிலுள்ள பன்னிரண்டு ஜோதிர் லிங் கங்களுக்கும் நடு நாயகமாக விளங்கும் விச்வேச்வரரைப் பாடினார்.

सानन्दमानन्दवने वसन्तम्
आनन्दकन्दं हतपापवृन्दम् ।
वाराणसीनाथमनाथनाथं
श्रीविश्वनाथं शरणं प्रपद्ये ॥

ஸாநந்த₃ம் ஆனந்த₃வனே வஸந்தம்
ஆனந்த₃ கந்த₃ம் ஹதபாபவ்ருந்த₃ம் |

வாராணஸீநாதம் அனாதநாதம்
ஸ்ரீவிச்வநாதம் சரணம் ப்ரபத்யே ||

ஆனந்தவனம், வாராணஸி என்னும் இவை இரண்டும் காசியின் மறுபெயர்கள். [இப்பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களுக்கும் ஸ்ரீ சங்கராசார்யர் பாடல் இருக்கிறது.]

ஸ்ரீ விச்வநாதஸ்வாமி கோயிலை அடுத்திருக்கும் அன்னபூர்ணாம்பிகையைத் துதித்தார். இன்றும் அன்னம் குறைவில்லாமல் ஸுபிக்ஷமாயிருக்க பெரியோர்கள் இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்து வருகிறார்கள். அன்னபூர்ணஷ்டகம் என்னும் இந்தஸ்தோத்திரத்தில் முக்கியமான ச்லோகம் இது :—

**அன்ன பூர்ணஷ்டகம்**


नित्यानन्दकरी वराभयकरी सौन्दर्यरत्नाकरी
निर्धूताखिलघोरपापनिकरी प्रत्यक्षमाहेश्वरी ।
प्रालेयाचलवंशपावनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥

நித்யானந்தகரீ வராபயகரீ ஸௌந்தர்ய ரத்னகரீ
நிர்தூதாகில கோர பாபநிகரீ ப்ரத்யக்ஷமாஹேச்வரீ |
ப்ராலேயாசலவம்சபாவனகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்ன பூர்ணேச்வரீ ||


காசியிலிருக்கும் காலபைரவர் ஸந்நிதானத்தை ஸ்ரீ ஆசார்யாள் அடைந்தார். பிராணிகளுக்கு நரக பயம் இல்லாமல் தவிர்ப்பதே காலபைரவ



ஸ்ரீ விச்வேச்வரர் கோயில், காசி.



நாகேசர் கோவில், தாருகாவனம்
(Oundh N· S· Railway: Chondi ஸ்டேஷனிலிருந்து 14 மைல்)



ஸோமனுதர் கோவில்:
(ஸௌராஷ்டிர தேசத்தில் Prabhas Pattan என்னும் ரயில்வே ஸ்டேஷனக்கருகில்)

மூர்த்தியின் கார்யம். அங்கு காலபைரவாஷ்டகம் என்னும் ஸ்தோத்திரத்தினல் நமது குருநாதர் ஸ்தோத்தரித்தார். அவ்வஷ்டகத்தில் முக்கியமான ச்லோகம் இது.

**காலபைரவாஷ்டகம்**

धर्मसेतुपालकं त्वधर्ममार्गनाशकं
कर्मपाशमोचकं सुशर्मदायकं विभुम् ।
स्वर्णवर्णकेशपाशशोभिताङ्गनिर्मलं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥

தர்மஸேது பாலகம் த்வதர்ம மார்க நாசகம்
கர்ம பாச மோசகம் ஸுசர்மதாயகம் விபும் |
ஸ்வர்ண வர்ண கேச பாச சோபிதாங்க நிர்மலம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே ||

நமது குருநாதருடைய பன்னிரண்டு வயது முதல் பதினன்கு வயதிற்குள் எல்லா பாஷ்யங்களும். விவேக சூடாமணி, உபதேச ஸாஹஸ்ரீ முதலிய தனிப் பெரு நூல்களும் உருவாயின. பதினறுவது வயதில் எழு சிரஞ்சீவிகளுக்குள் ஒருவரான வ்யாஸ முனிவர் ஒரு கிழப் பிராம்மண ரூபத்துடன் நமது குருநாதர் முன்பு ஆவிர்ப்பவித்தார். தான் செய்த ப்ரும்மஸூத்ரத்திற்கு நமது குருநாதர் செய்திருக்கும் பாஷ்யத்தைப் பரீக்ஷிப்பது போல் கோபத்துடன் வாதம் செய்ய, நமது குருநாதர் பூர்ணமான சாந்தத்துடன் எல்லாவிஷயங்களையும் அவருக்குத் தெளிவுறும்படிச் செய்தார்.

காசியில்

அவர் பாஷ்யம்

இயற்றியது

வ்யாஸ மஹரிஷிக்கு அடங்கா ஆனந்தம் உண்டாயிற்று. தன்னுடைய ஸ்வஸ்வரூபத்தை வெளிக்காட்டி நமது குருநாதருக்குப் பூர்ண அனுக்ரஹம் செய்தார்.

தனக்கு ஸன்யாசாச்ரமத்தில் கிடைத்த மறு எட்டு வருஷங்களும் பூர்த்தியாகி விட்டதால் மஹரிஷியின் அனுமதியுடன் 'நான் என் உலகம் செல்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு 'இந்த பாஷ்யத்தைத் தங்கள் சரணத்தில் அர்ப்பித்து விட்டேன். என்று அவர் சரணத்தில் பாஷ்யத்தை வைத்தார். வ்யாஸ மகரிஷியோ பின் வருமாறு சொல்லலானார். "நீ காசியில் இவ்வளவு காலமிருந்து பாஷ்யப்ரவசனம் செய்ததினால் 56 தேசங்களிலும் உனது பாஷ்யம் குன்றின் மேலிட்ட விளக்கைப் போல் சங்கர பாஷ்யம் என்கிற அழியாப் புகழுடன் விளங்கினாலும் 56 தேசங்களிலும் ஆங்காங்கு இன்னும் அநேக அனாதி வேதநெறிசெல்லா துர்மதங்கள் எனும் விஷப்பூண்டுகள் உண்மைநெறிக்கு உதவாமல் களைகளைப் போல் ஆங்காங்கு தங்கியிருக்கும். அவைகளை யெல்லாம் களைந்து உண்மை ஞானப் பயிரை நாடெங்கும் செழிக்கச் செய்யும் பெருந்தொண்டை நீ மேற்கொண்டே ஆகவேண்டும். அதற்காக நீ நாடெங்கும் திக் விஜயம் செய்ய
வேண்டும். ஸர்வஜ்ஞபீடாரோஹண
இரட்டித்த மும் செய்யவேண்டும். அதற்காக
வயது திரும்பவும் இதோ நான் என் தவத்தின் பயனை
இரட்டித்தது. மீண்டும் 16 ஆண்டுகளைத் தருகின்
றேன்" என ஆசிகூறி இன்னும் 16

வயது கொடுத்தார். இவ்வாறு நமது குருநாதர் 32 ஆண்டுகள் இவ்வுலகில் வாஸம் செய்யும்படி ஏற்பட்டது எனக் கூறுவர் பெரியோர்.

**அக்காலத்தில் எவ்வளவு துர்மதங்கள் இருந்ததாகக் கணக்கிடப் பட்டிருக்கின்றன?**

27 துர்மதங்களென சங்கர விஜயம் கூறுகிறது. அவைகளையெல்லாம் நமது குருநாதர் எப்படிக் களைந்தார்? அன்பும் அருளும் தெளிவுமே அவைகளைக் களைவதற்கு நமது குருநாதருக்கு ஆயுதங்களாக இருந்தன. சிவபெருமானுடைய தக்ஷிணா மூர்த்தி அவஸரத்தின் அவதாரமே நமது ஸ்ரீ சங்கர பகவத்பாத குருநாதர் என நூல்கள் கூறுகின்றன. இருவருக்கும் முகத்தில் புன்முறுவல், கையில் ஞான முத்திரை.

**ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியின் அம்சமே ஆதிசங்கரர்**

நமது குருநாதரின் அவதாரத்துக்கு முன் நடந்த அவதாரங்களெல்லாம் அநேகமாய் விஷ்ணுவின் அவதாரங்கள். அவ்வவதார காலங்களில் அசுரர்களும் அரக்கர்களுமான மிருக பலமுள்ளவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களாக இருந்தனர். ஆதலால் மஹாவிஷ்ணு அம்பு, வில், சக்கரம் இவைகளோடு அவதாரம் செய்து அவர்களை ஒழித்தார். நமது குருநாதர் அவதாரம் ஞானோபதேசத்திற்காகவே ஏற்பட்டதாகையால் இவ்வவதாரம் தக்ஷிணாமூர்த்தியின் அவதாரமாக அமைந்தது.

**அக்காலத்தில் நாட்டிலிருந்த முக்கியமான மதங்கள்**

ஸ்ரீசங்கராசார்ய அவதார காலத்தில் 72 வகையான மதங்கள் நாட்டிலிருந்தன வென்று சங்கர விஜய நூல்களால் அறியப்படுகிறது. ஆனால் ஆசார்யர் அருளிச்செய்த பாஷ்ய நூல்களிலோ முக்கியமாக கர்ம மீமாம்ஸா மதம், ஸாங்க்யமதம், புத்தமதம், ஜைனமதம் ஆகிய இந் நான்கு மதங்களின் ப்ரஸ்தாபமே அதிகமாகக் காணப்படுகின்றது. இவைகளில் முதல் இரண்டு மதங்கள் வேதத்தையும் ப்ரமாணமாகக் கொண்டவை. அவ்விதமிருப்பினும் ஈச்வர பக்தியையும் ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்தையும் லக்ஷ்யமாகக் கொண்டவை அல்ல.

முதல் மதம் வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்களையே லக்ஷ்யமாகவுடையது. இரண்டாவதான ஸாங்க்யமதம் ஜீவாத்மா தேஹ சம்பந்தமில்லாத ஒரு வஸ்து என்ற விவேகம் ஒன்றையே லக்ஷ்யமாகக் கொண்டது.

**ஜைமினியின் கர்மமீமாம்ஸா மதம்**

முதல் மதத்தினர்க்கு வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களை யெல்லாம் அனுஷ்டித்து அவைகளை ஈச்வரார்ப்பணம் செய்யவேண்டும் என்னும் தத்வத்தை ஸ்ரீ ஆதி ஆசார்யர் உபதேசித்தார். அவ்விதம் அர்ப்பணம் செய்து ஈச்வரானுக்ரஹம பெற்று அவ்வனுக்ரஹத்தினால் சித்தம் சுத்தி அடைந்த அளவில், சித்தத்தில் வேறு ஒரு நினைவுமில்லாமல் வெளியிலும் ஒரு காரியமுமில்லாமல் எங்கும் நிறைந்த பரமாத்ம ஸ்வரூபமாக நிற்

பதே எல்லா கர்மங்களின் லக்ஷ்யம் என்பதை உபதேசித்தருளினார்.

கபில ரிஷியின் ஸாங்கிய மதம்

இரண்டாவதான ஸாங்க்யமதஸ்தர்களுக்கு தேகத்தினின்று ஜீவாத்மாவைப் பிரித்து அறிவதோடு மாத்திரம் நில்லாமல் அவ்வாத்மாவே எங்கும் நிறைந்த பரிபூர்ண பரமாத்மாவுடன் ஏகமாகி நிற்றலை த்யானித்து அனுபவத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று உபதேசித்தார்.

புத்த மதமும் ஜின மதமும்

மூன்றாவதான பௌத்தமதமும், நான்காவதான ஜைனமதமும் அஹிம்ஸை முதலிய சில பொதுக்கொள்கைகளை ஆதரித்து நின்றன. ஆயினும் அவ்விருமதங்களும் உலகத்தின் அனாதி ப்ரமாணமான வேதத்தை ஆதாரமாகக் கொள்ளவில்லை. புத்தி ஒன்றையே ஆதாரமாகக் கொண்டதனால் பௌத்தமதம் என்றபெயர் வந்தது. இவ்விருமதங்களிலும் உலகத்துக்கெல்லாம் ஆதாரமான ஒரு பரமாத்மதத்வமோ உலகத்தை யெல்லாம் ரக்ஷிக்கும் கருணையுருக் கொண்ட ஒரு ஈச்வரதத்வமோ இடம் பெறவில்லை. உலகமெல்லாம் க்ஷணிகம் [அதாவது பார்க்கும் பொருள்கள் எல்லாமே ஒரு விளக்கின் ஜ்வாலையைப்போல க்ஷணத்திற்குக்ஷணம் வெவ்வேறாக உண்டாகி அழிந்து கொண்டிருக்கின்றன] என்றும், உலகமெல்லாம் சூன்யமென்றும் நினைத்து சமாதியிலிருப்பதையே புத்தமதம் லக்ஷ்யமாகக் கொண்டது.

அஹிம்ஸா விஷயத்தில் புத்தமதத்தைவிட ஜைனமதம் கடுமையான வ்ரதம் பூண்டது. புத்த மதம் அஹிம்ஸையை ப்ரசாரம் செய்யினும், பிறர் கொன்ற மாம்ஸத்தை புத்தர்கள் உட்கொள்ளுவது பழக்கமாயிருக்கிறது. புத்தரே பன்றிமாம்ஸத்தைத் தின்றதனால் காலமானதாக அவர் சரித்திரம் கூறுகிறது. ஆனால் இவ்விருமதத்தினரும், வேதமானது யாகங்கள் செய்வதை விதிக்கின்றதாலும், யாகம் ஹிம்ஸையோடு கலந்திருப்பதாலும் அவ்வேதத்தை ஆதாரமாகக் கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. இந்தக்காரணத்தினால் வேதத்தை விட்டு நழுவிய அவர்களுக்கு அவ்வேதத்திலுள்ள ஈச்வர பக்தியும், எங்கும் நிறைந்த அன்பானந்தக் கடலாம் பரம் பொருளிடத்தில் ஞானத்தால் ஒன்றாகி நிற்கும் மோக்ஷானுபவமும் நஷ்டமாகிவிட்டன.


**அவ்வெழுபத்திரண்டு மதங்களையும் ஏன் ஆசார்யரவர்கள் நிராகரித்தார்கள் ?**

நமது குருநாதருக்கு எந்த மதத்தையும் நிராகரிக்கும் எண்ணமில்லை. அவருடைய பாஷ்யத்தின் போக்கைப் பார்க்கும் பண்டிதர்களுக்கு 'எந்த மதத்திலும் உண்மையான அம்சங்கள் சில இருக்கவே இருக்கின்றன. அவ்வித அம்சங்களெல்லாம் வேதங்களின் அந்தமான உபநிஷத்துக்களின் பூர்ண அத்வைத அனுபவ நிலையை அடையப் படிக்கட்டுகளாக உபயோகப்படும்' என்னும் கருத்தே தெளிவாகத் தெரிகிறது. வேதத்திற்கு

**அவரவர்கள் பூர்வ பரம்பரை அநுஷ்டானத்தையே ஸ்தாபித்துத் தந்தார் நமது குருநாதர்**




கேதாரேச்வரர் கோவில் ஹ்ருஷீகேசத்திலிருந்து 146 மைல்



குகட் மடம் தேவஸ்தானம்—நர்மதா தீரம்

மாறுபாடான அம்சங்களை மாத்திரம் விலக்கி பூர்வா சாரப்படி அந்தந்த மதானுஷ்டானங்களை அவரவர்கள் கடைப்பிடிக்கும்படிச் செய்ததே சங்கரவிஜயம்.

முன்னிருந்த 72 மதங்களில் சிலவற்றில் ஈச்வர பக்தி இல்லாமலும், சிலவற்றில் வேதோக்தமான* ஆசார அனுஷ்டானங்கள் இல்லாமலும், சிலவற்றில் துவேஷமனப்பான்மை மேலிட்டும், சிலவற்றில் அசுசியான பழக்கங்கள் மலிந்து மிருந்தன. அவ்வித குறைபாடுகளை யெல்லாம் அனுபவத்தினாலும் உண்மையை விளக்குவதாலும் அம்மதங்களினின்று நீக்கி அவைகளை யெல்லாம் சீர்ப்படுத்தும் முறையில்

* வேதத்தில் சொல்லப்பட்ட யாகங்களின் உத்தேசம் மாம்ஸம் உண்பதல்ல. மாம்ஸம் உண்ணுவதற்காக அநேகநாள் பட்டினி கிடந்து அநேக ஆயிரம் ரூபாய்களைச் செலவு செய்து அநேக இரவுகளும் பகல்களும் மந்திரம் ஓதி கஷ்டப்பட அவசியமில்லை. அவ்விதம் செய்யப்பட்ட யாகத்திலும் ஒரு சிறிதளவு மாம்ஸத்தையே ப்ரஸாதமாக உட்கொள்ளும்படி வேதம் விதிக்கிறது. உட்கொள்ளாமல் முகர்ந்துபார்ப்பதே போதும் என்ற விதியும் உண்டு. வேதத்தில் விதித்திருப்பது த்யாகமே (Sacrifice) யன்றி வேறல்ல.

யுத்தகாலத்தில் தேசத்தின் க்ஷேமத்திற்கென்ற பெயரால் நமது பக்ஷத்திலும் பிறபக்ஷத்திலும் எவ்வளவோ உயிர்கள் த்யாகம் செய்யப்படுகின்றன. அஹிம்ஸா மூர்த்தியான காந்தியவர்களும், ஒரு ஸமயம் எல்லா மாகாண மந்திரிகளும் உணவுப் பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வதற்காக மத்ய ஸர்க்காரில் கூடியிருந்தபோது, சென்னை மந்திரிகளைப்பார்த்து மூன்று பக்கங்களும் கடல் சூழ்ந்திருக்கும் மாகாணத்தாராகிய நீங்களுமா இங்குவந்து கடலில்லா இதரமாகாணத்தாருடன் போட்டியிட வேண்டும் என்று கூறியிருக்கிறார். அவருடைய அபிப்பிராயத்திலும் மனிதரென்னும் உயர்ந்த உயிர்களுக்காகத் தாழ்ந்த உயிர்களான மகரங்களைப் பிடிப்பது அஹிம்ஸாதர்மத்திற்கு விரோதமில்லாதகார்யமென்றே பட்டதாகத் தெரிகிறது.

உருவாகிய ஆறு மதங்களை நிலைநிறுத்தியதே ஷண் மதஸ்தாபனம். இன்றும் ஆதிசங்கரருடைய பக்தர்கள் அவரவர்கள் பூர்வாசாரப் பிரகாரம் சிலர் விபூதி ருத்ராக்ஷங்களையும், சிலர் திருமண் காப்பையும், சிலர் துளசிம்ருத்திகையையும், சிலர் கோபீ சந்தனத்தையும், சிலர் தாமரை மணி மாலையையும், சிலர் துளஸி ஜபமாலையையும், சிலர் ஸ்படிகமணி மாலையையும் தாரணம் செய்துகொண்டு அவர்க்குரிய உபாஸனை மார்க்கங்களை அனுஷ்டித்து வருகிறார்கள்.

---

உலகத்தில் மனிதனை அடித்துத் தின்பவரைக் காட்டிலும் (Cannibals) இதர ப்ராணிகளைக் கொன்று தின்பவர் உயர்ந்தவரெனக் கருதப்பட்டால் மாம்ஸம் தின்பவரைக் காட்டிலும் தான்யம் காய்கறிகளைத் தின்பவர்கள் உயர்ந்தவராகவேண்டும். நமது சாஸ்திரங்களில் அவர்களும் கூட அநேக ஜீவன்களை வளரச் செய்யும் விதைகளைத் தின்பதால் அவர்களும் ஹிம்ஸகர்கள்தான் என்ற கருத்துடன் "பீஜவதம்" செய்யாது இலை, பழம், பால் இவைகளையே உணவாக உடையவர்களே உத்தமமான ஆஹார சுத்தியுடையவர்களென்ற கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

அவ்வித நியமத்தை யுடையவர்கள் கிருஹஸ்தாச்ரமிகளாக இருந்தால் அவர்களுட்கூட ஹிம்ஸையோடு கூடிய யஜ்ஞத்தைச் செய்தே தீரவேண்டுமென்றும், யஜ்ஞத்தில் செய்யப்படும் ஹிம்ஸை ஹிம்ஸையல்ல என்றும் விதிகள் கூறுகின்றன. உலகத்துள்ள எல்லா உயிர்களின் க்ஷேமத்தைக் கோரும் வேதம் அவ்வித க்ஷேமத்திற்காக சில உயிர்களை முறைப்படி த்யாகம் செய்தே தீரவேண்டும் என கட்டளை யிடுகின்றது. அவ்விதி முறைப்படி நடக்கும் யஜ்ஞங்களில் சிலவற்றில் தான்யங்களும், சிலவற்றில் ஆடுகளும், சிலவற்றில் குதிரைகளும், சிலவற்றில் மனிதர்களும் கூட யாகத்ரவ்யங்களாக விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் வேதத்தில் உள்ளபடி மனிதன் இதரப்பிராணிகளைக் கொன்று தின்பது யாகத்தின் லக்ஷ்யமென்பது அறவே இல்லை. உலகத்தில் எல்லா உயிர்களிடத்தும் உள்ள கருணையே யாகங்களின் லக்ஷ்யம். அவ்வித யாகங்கள் அதே லக்ஷ்யத்துடன் செய்பவனுக்கு சித்தசுத்தியைக் கொடுத்து ஆத்மாவின் உண்மை நிலையாம் மோக்ஷத்திற்கு உதவுகின்றன.



நமது குருநாதரின் சிஷ்யர்களின் முக்கியமானவர், தோடகாசார்யர்

வேதங்களில் விதிக்கப்பட்ட யஜ்ஞங்களின் நோக்கம் எல்லா உயிர்களிடமும் பரந்து நிற்கும் உண்மையான ஜீவகாருண்யமே என்பதையும், ஈச்வர பக்தியினுல் கண்ணில் கண்ணீர் ததும்பாமல் நிஜ ஆனந்த மோக்ஷ நிலையை அடைவது துர்லபமென்றும் அக்காலத்து புத்தர்களையும் ஜைனர்களையும் பார்த்து நமது ஸ்ரீ சங்கராசார்யரவர்கள் அன்புடன் விளக்கியதினுலேயே வேதத்திற்குப் புறம்பான அவை போன்ற ஸமயங்கள் நமது பாரத நாட்டில் அநேகமாக மறைந்து மக்களெல்லோரும் தமக்கு ஸஹஜமான பூர்விக ஆஸ்திக புத்தியுடன் ஈச்வர பக்தர்களாக வாழ்ந்து வருகிறோம்.

சங்கர ஜயந்தி புண்யகாலம் உலகத்தில் ஏற்பட்டதனுல்தான் க்ருஷ்ண ஜயந்தி, சிவராத்திரி, ஸ்ரீ ராமநவமி இப்புண்ய காலங்களெல்லாம் புண்ய காலங்களாயின.

வ்யாஸமஹர்ஷியின் உத்திரவு பிரகாரம் ஸ்ரீ சங்கராசார்யசுவாமிகள் திக் விஜய காலத்தில் எல்லா தேசங்களிலுமுள்ள பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் வேதவேதாந்தங்களின் உண்மையை அறிவித்ததோடு மாத்திரம் அல்லாமல் அநேக விடங்களில் யந்த்ர ஸ்தாபனங்களையும், பீடஸ்தாபனங்களையும், ஆலயஸ்தாபனங்களையும் செய்தருளினுர்.

அக்காலத்தில் 6000 சிஷ்யர்கள் நமது குருநாதரின் கூடவே இருந்து பிறவிப்பயனை அடைந்தார்களென சரித்திர நூல்கள் கூறும். அவர்களில் தக்ஷிணுமூர்த்திக்கு ஸனகாதியரைப் போல ப்ரதானமாயிருந்த சிஷ்யர்கள் நால்வர். அவர்கள் பத்மபாதர்-ஸுரேச்வராசார்யர்-ஹஸ்தாமலகர்-தோடகாசார்யர்.

ஸ்ரீ ஆதிசங்கராசார்யஸ்வாமிகள் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்த காலத்தில் நாட்டிலுள்ள ஸகல சாஸ்திர வித்வான்களும் குழுமினர். எல்லாருடைய ஆசங்கைகளுக்கும் நமது குருநாதர் சந்தோஷ முகத்துடன் தெளிவாக சமாதானம் கூறினர். கடைசியாக ஸரஸ்வதி தேவியே கேள்விகள் கேட்டாள். அவளுடைய ஆசங்கைகளுக்கும் முறை தவறாது சமாதானம் அளித்து திருப்திசெய்தார்.

**தீர்த்த யாத்திரையும் ஸர்வஜ்ஞபீடா ரோஹணமும்**

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளால் பாடல் பெற்ற ஜ்யோதிர் லிங்கஸ்தலங்கள் 12 என்று சொன்னோம்.*

---

*1. ஸோமநாதம்: ஸௌராஷ்டிர தேசத்தில் Prabhas Pattan என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கருகில்.

2. மஹாகாளேச்வரம்: உஜ்ஜயினி Ujjain Ry. Station B. B. and C. I. Ry.

3. மல்லிகார்ஜுனம்: ஸ்ரீசைலம். கர்னூல் ஸ்டேஷனிலிருந்து போகவேண்டும்.

4. அமலேச்வரம்: Onkar Mandhata: B. B. and C. I, Martakka ஸ்டேஷனிலிருந்து 7 மைல்.

5. வைத்யநாதம்: Parli Vaidyanath station, N. S. Ry. ஸ்டேஷனிலிருந்து 1 மைல்.

6. பீமசங்கர் ஸ்தலம், பூனாவிலிருந்து Zunnar போய் அங்கிருந்து 90 மைல்

7. ராமேச்வரம், Station, S. I. Ry. Ramnad Dt.

8. நாகேசம், தாருகாவனம் Oundah, N. S. Railway Chondi ஸ்டேஷனிலிருந்து 14 மைல்.

9. காசி விச்வேசம் (வாராணஸி): Benares.


10. த்ரயம்பக ஸ்தலம், கௌதமீதடம்: Nasik Road (G.I. P) (Bombay Presidency). ஸ்டேஷனிலிருந்து 23 மைல்.

11. கேதாரேச்வரம்: Himalayas; ஹ்ருஷீகேசத்திலிருந்து 146 மைல்.


12. குஸ்ருணேசம், சிவாலயம்: Verul க்ராமம்: எல்லோரா குகைகளிலிருந்து 1 மைல். Aurangabad ஸ்டேஷனிலிருந்து 18 மைல்.




ஓம்கார் மாந்தாதா கோவில்
(B. B. and C. I, Martakka
ஸ்டேஷனிலிருந்து 7 மைல்)



த்ரியம்பகேச்வரம்—நாஸிக்
(Nasik Road ஸ்டேஷனிலிருந்து 23மைல்)



ஸ்ரீ வரதராஜர் கோவில், காஞ்சிபுரம்



ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவில் காஞ்சீபுரம்

இஸ்தலங்களை ஸ்ரீ ஆசார்யரவர்கள் மூன்று ச்லோகங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

सौराष्ट्रे सोमनाथं च श्रीशैले मल्लिकार्जुनम् ।
उज्जयिन्यां महाकालमोङ्कालममलेश्वरे ॥
परल्यां वैद्यनाथं च डाकिन्यां भीमशङ्करम् ।
सेतुमध्ये तु रामेशं नागेशं दारुकावने ॥
वाराणस्यां तु विश्वेशं त्र्यम्बकं गौतमीतटे ।
हिमालये तु केदारं घुसृणेशं शिवालये ॥

ஸௌராஷ்ட்ரே ஸோமநாதஞ்ச ஸ்ரீஶைலே மல்லிகார்ஜுநம் |
உஜ்ஜயிந்யாம் மஹாகால மோங்காரமம லேஶ்வரே ||
பரல்யாம் வைத்யநாதஞ்ச டாகிந்யாம் பீமஶங்கரம் |
ஸேதுமத்யேது ராமேஶம் நாகேஶம் தாருகாவநே ||
வாராணஸ்யாம்து விஶ்வேஶம் த்ர்யம்பகம் கௌதமீதடே |
ஹிமாலயேது கேதாரம் குஸ்ருணேஶம் ஶிவாலயே ||

ஸரஸ்வதியைப் பற்றி ஒரு ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். அதில் இது ஒரு ச்லோகம். இது ஞானத்தை யளிக்க வல்லது:—

पुस्तकजपवटहस्ते वरदाभयचिह्नचारुबाहुलते ।
कर्पूरामलदेहे वागीश्वरि शोधयाशु मम चेतः ॥

புஸ்தகஜபவட ஹஸ்தே
வரதாபய சிஹ்நசாரு பாஹுலதே |
கர்பூராமல தேஹே
வாகீஶ்வரி ஶோதயாஶு மம சேத: ||

இவ்விதமே ஆஞ்ஜநேயரை 5 ச்லோகங்களால் (ஹநுமத் பஞ்சரத்னம்) துதித்திருக்கிறார். இது மனோதைர்யத்தைக் கொடுக்க வல்லது. அதில் முக்கியச்லோகம் :—

दूरीकृतसीतार्तिः
प्रकटीकृतरामवैभवस्फूर्तिः ।
दारितदशमुखकीर्तिः
पुरतो मम भातु हनुमतो मूर्तिः ॥

தூரீக்ருத ஸீதார்த்தி :
ப்ரகடீக்ருத ராமவைபவஸ்பூர்த்தி : |
தாரிததசமுககீர்த்தி :
புரதோ மம பாது ஹநுமதோ மூர்த்தி : ||

இவ்விதமே *லக்ஷ்மீந்ருஸிம்ஹ மூர்த்தியைப் பற்றி ஒரு ஸ்தோத்திரம் இயற்றியிருக்கிறார். அது மரண ஸங்கடத்தையும் வியாதியையும் தடுக்கவல்லது.

बद्ध्वा गले यमभटा बहु तर्जयन्तः
कर्षन्ति यत्र भवपाशशतैर्युतं माम् ।
एकाकिनं परवशं चकितं दयालो
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥

* ஸ்ரீந்ருஸிம்ஹ மூர்த்தி அநேக தடவைகளில் ஸ்ரீ ஆதி ஆசார்ய ஸ்வாமிகளின் திவ்ய சரீரத்தைக் காத்தருளியிருக்கிறார். ஒரு சமயம் நமது குருநாதருடைய எல்லைகடந்த ஔதார்ய குணத்தினால் ஒரு காபாலிகன் கபட வேண்டுகோளுக்கிசைந்து தன் சிரத்தையே அவனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தார். காபாலிகனும் அதைக் கொய்யத் தன் கத்தியை நீட்டினான். அச்சமயம் பத்மபாதாசார்யரவர்களுடைய உபாஸனா தெய்வமான ஸ்ரீ ந்ருஸிம்ஹ மூர்த்தி தனது பக்தனை அவர் பேரில் ஆவிர்பவித்து அக்காபாலிகனை ஹிரண்யகசிபுவின்கதியை அடையச் செய்தார்.

ஸதீ ஶ்ரீவா முலே யமஹடா : ஸெ ஹா தர்ஜயந்த:
கர்ஷந்தி யத்ர ஹவ பாஶஶதை: யுதம் மாம் |
ஏகாகினம் பரவஶம் சகிதம் தயாளோ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் ||

**நமக்கு இவ்வளவு பரோபகாரம் செய்திருக்கும் ஸ்ரீ ஆதி சங்கரருக்கு நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமை என்ன?**

**நாம் செய்ய வேண்டிய கடமை**

*நாம் எல்லோரும் வேத நெறியை அனுசரித்து நமது பாபங்களைப் போக்கிக்கொண்டு இம்மையிலும் மறுமையிலும் நாம் இடைவிடா ஆனந்தத்துடன் இருக்கவேண்டும் என்கிற காருண்யத்தோடு தானே தயாமூர்த்தியின் உருவாக பூமியில் அவதரித்து நாம் எல்லோரும் கடைத்தேறுவதற்கு அவரவர்கள் சக்திக்கும் மனோபாவத்திற்கும் தக்கவாறு பலவிதமாக உபதேசங்கள் செய்திருக்கிற அந்த காருண்ய மூர்த்தியை நாம் எப்போதும் மறவாமல் மனதில் தியானித்துக் கொண்டாடி அவர் காட்டிய வழியைப் பின்பற்றி அவர் கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரராகவேண்டும். அவருடைய முக்கிய சிஷ்யரில் ஒருவரான தோடகாசார்யரவர்களுக்குச் சகல வேதங்களும் சாஸ்திரங்களும் அவரை அடையும்படி ஸ்ரீகுருநாதர் அனுக்ஹிரத்தபோது அவர் ஆனந்த தாண்டவமாடி தன் குருநாதரைப் போற்றிய தோடக சரணகதி என்னும் ஸ்தோத்திரத்தில் ஒரு ச்லோகத்தையாவது நாம் தினந்தோறும் பாராயணம் செய்யவேண்டியது அத்யவச்யம்.*

विदिता न मया विशदैककला
न च किञ्चन काञ्चनमस्ति गुरो ।
द्रुतमेव विधेहि कृपां सहजां
भव शंकर देशिक मे शरणम् ॥

விதிதா ந மயா விஶதைககலா
ந ச கிஞ்சன காஞ்சனமஸ்தி ஗ுரோ |
த்ருதமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம்
பவ ஶங்கரதேஶிக மே ஶரணம் ||

இச் ச்லோகத்தைப் பாராயணம் செய்வதோடு ஸ்ரீ ஆசார்யர்களவர்களால் துதிக்கப்பட்ட மூர்த்திகளில் அவரவர்கள் உபாஸிக்கும் மூர்த்தியைப் பற்றின ச்லோகத்தைத் தினந்தோறும் பாராயணம் செய்யவேண்டும். அதோடு அவரவர்கள் உபாஸநா மூர்த்திக்குரிய மந்திரத்தை விதிப்படி உபதேசம் செய்து கொண்டு அதைத் தினந்தோறும் ஜபிக்க வேண்டும். தாம் எடுத்துக் கொள்ளும் எல்லா கார்யங்களும் நிர்விக்னமாக நடக்கும் பொருட்டு எல்லோரும் ஸ்ரீ ஆசார்யாள் செய்த கணபதி ஸ்தோத்திரத்தின் ச்லோகத்தைத் தினம் தோறும் சொல்ல வேண்டும். இப்படி யெல்லாம் செய்து நாம் எல்லோரும் ஸ்ரீ ஆசார்யரவர்களின் பூர்ண க்ருபைக்குப் பாத்திரர்களாக ஆகி பரம்பொருளின் அருளையும் பூர்ணமாகப் பெற்று நீடூழி வாழ்வோமாக.

*ஸ்ரீகுருநாதன் திருவடிப்புகழ் எங்கும் ஓங்குக!*

*அம்பிகையின் அருள் எங்கும் பொங்குக!*

ஸ்ரீ ஆசாரியாள் அருளிச் செய்த பாராயணத்துக்குரிய முக்கியமான சில ச்லோகங்கள்.

1. கணேசபஞ்சரத்னத்தில் ஒரு கவி.

मुदा करात्तमोदकं सदा विमुक्तिसाधकं
कलाधरावतंसकं विलासिलोकरक्षकम् ।
अनायकैकनायकं विनाशितेभदैत्यकं
नताशुभाशुनाशकं नमामि तं विनायकम् ॥

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்திஸாதகம்
கலாதராவதம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம் ।
அநாயகைகநாயகம் விநாசிதேப தைத்யகம்
நதாசுபாசுநாசகம் நமாமி தம் விநாயகம் ॥

மோதகமேந்தியே முக்தியளிப்பான்
கதியிலா மாந்தர்க் கொருநாயகனும்
வணங்குவார் துயரை அக்கணமொழிப்பான்
விநாயகப் பெருமான் சரணமெனக்கே.

2. திருச்செந்தூர் ஸுப்ரஹ்மண்ய புஜங்கஸ்தோத்திரத்தில் ஒரு கவி.

मयूराधिरूढं महावाक्यगूढं
मनोहारिदेहं महच्चित्तगेहम् ।
महीदेवदेवं महावेदभावं
महादेवबालं भजे लोकपालम् ॥

மயூராயிரூ஢ம் மஹாவாக்ய ஗ூடம்
மனோஹாரி தேஹம் மஹச்சித்தகேஹம் |
மஹீதேவ தேவம் மஹாவேத பாவம்
மஹாதேவபாலம் பஜே லோகபாலம் ||

மயில்வாகனத்தின் மீதேறி
வேதாந்தத்தின் உள்நின்று
அடியாருள்ளம் குடிகொண்டு
உலகைக்காக்கும் சிவமகனும்—
சுப்ரமண்யப் பெருமானே சரணம்.

3. ப்ரபஞ்சஸாரத்தில் ஸூர்யோபாஸனைக்காக அருளிய த்யானச்லோகம்.

अरुणोऽरुणपङ्कजे निषण्णः
कमलेऽभीतिवरौ करैर्दधानः ।
स्वरुचाहितमण्डलस्त्रिनेत्रः
रविराकल्पशताकुलोऽवताद्वः ॥

அருணோருணபங்க்ஜே நிஷண்ண :
கமலே (அ) பீதிவரௌ கரைர்தயான : |
ஸ்வருசாஹித மண்டல ஸ்த்ரிநேத்ர :
ரவிராகல்பஶதாகுலோ (அ) வதாத்வ: ||

செந்தாமரை யோர்ந்த
செம்மேனியனும் | ரவி
நீடுழிக் காப்பாம் ||

### 4. ஷட்பதீஸ்தோத்ரத்தில் ஒரு கவி.

अविनयमपनय विष्णो
दमय मनः शमय विषयमृगतृष्णाम् ।
भूतदयां विस्तारय
तारय संसारसागरतः ॥

அவினயமபநய விஷ்ணோ
தமய மன : ஶமய விஷயம்ருகத்ருஷ்ணாம் |
பூததயாம் விஸ்தாரய
தாரய ஸம்ஸாரஸாகரத: ||
உள்ளமடக்கிக் கருவணைபெருக்கி
வாழ்க்கைக் கடலைக் கடத்தி
யருள்வாய் திருமாலே.

### 5. லிங்காஷ்டகத்தில் ஓர் கவி.

कुङ्कुमचन्दनलेपितलिङ्गं
पङ्कजहारसुशोभितलिङ्गम् ।
सञ्चितपापविनाशनलिङ्गं
तत् प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

குங்கும சந்தன லேபிதலிங்கம்
பங்கஜ ஹாரஸு ஶோபிதலிங்கம் |
ஸஞ்சிதபாப விநாஶனலிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஶிவ லிங்கம் ||


ஜன்மாந்தரத்தின் வினையனைத்தும்
அறவே அறுக்கும் ஸதாசிவமே.

6. பவானீ புஜங்கத்தில் ஓர் கவி.


भवानी भवानी भवानी त्रिवारम्
उदारं मुदा सर्वदा ये भजन्ति ।
न शोको न मोहो न पापं न भीतिः
कदाचित् कथञ्चित् कुतश्चिज्जनानाम् ॥

ஹவானீ ஹவானீ ஹவானீ த்ரிவாரம்
உதாரம் முதா ஸர்வதா யே ஹஜந்தி ।
நஶோகோ நமோஹோ நபாபம் நஹீதி:
கதாசித் கதஞ்சித் குதஶ்சித் ஜனானாம் ॥

பவானீ பவானீ பவானீயென தேவியை மும்முறை உச்சரித்து சரணமடைபவர் ஒரு பொழுதும் எவ்விதத்தும் எதிலிருந்தும் துயருறார், மயங்கார், பாபத்திற்காளாகார், அஞ்சார்.




ஸ்ரீ சங்கராசார்யர் மடம், கும்பகோணம் (வெளித் தோற்றம்)



ஸ்ரீ சங்கராசார்யர் மடம், கும்பகோணம்: உபங்யாஸ மண்டபம்

गुरुपुङ्गव पुङ्गवकेतन ते




समतामयतां नहि कोऽपि सुधीः ।

शरणागतवत्सल तत्त्वनिधे ॥

भव शङ्कर देशिक मे शरणं